# SUBORDINATE COURT, PADMANABHAPURAM
# CASE NO.SC.246/2017
# Deposition of P.W.1

Name : திரு. சதீஷ்குமார்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:01.06.2022**

**முதல் விசாரணை-**

நான் முட்டைக்காட்டில் தாமசிக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். சாட்சி ஜெயகுமார் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இன்று நீதிமன்றத்திற்கு வராத 2ம் எதிரி ஜாண் மெக்கடியா 7ம் எதிரி செல்வின் ஆகியோர்களை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

என்னை போலீசார் விசாரித்த போது 31.7.2011ம் தேதி காலை 8.20 மணி அளவில் நானும், சாட்சிகளும் நின்று பேசிக்கொண்டிருந்த போது KL03A2673 பதிவெண் கொண்ட காரில் வந்த எதிரிகள் கீழே இறங்கி அப்போது அங்கு நின்று கொண்டிருந்த ஜெகுமாரின் கழுத்தில் 1ம் எதிரி கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினார் என்றும், 2ம் எதிரி ஜெயகுமார் அணிந்திருந்த லுங்கியை கழற்றி எடுத்து அவரை அவமானப்படுத்தினார் என்றும், மற்ற எதிரிகள் சாட்சி ஜெயகுமாரை வலுக்கட்டாயமாக இழுத்து மேற்படி காரில் வைத்து கடத்தி சென்றார் என்றும் போலீசார் விசாரணையில்

கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு  பயந்து பொய் சாட்சியம்  சொல்கிறேன் என்றால் சரியல்ல.